# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் :03/2015**

இலக்கம் 20,வோட் பிளேஸ்,
கொழும்பு 07.

2015.02.12

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாகஅதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**<u>2015 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபை ஆளணிகளில் பணி புரிபவர்களுக்கான கொடுப்பனவுகளை திருத்தியமைத்தல்</u>**

“2015 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான இடைக்காலக் கொடுப்பனவுகளை செலுத்துதல்” எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள 2014.11.12 ஆம் திகதிய 24/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையை அமுல்படுத்துதல் தொடர்பான 2014.11.13 ஆம் திகதிய 12/2014 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய மேற்கூறப்பட்ட ஆளணிகளுக்கு தற்போது மாதாந்தம் செலுத்தப்படும் ரூபா 3000/- இடைக்காலக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக 2015 பெப்ரவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் மேலும் ரூபா 5000/- வினை கொடுப்பனவாக செலுத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆளணிகளுக்குச் செலுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ரூபா 10000/- கொடுப்பனவின் மீதித் தொகையான ரூபா 2000/- வினை 2015 ஜுன் மாதம் முதல் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. அதன் பிரகாரம், பல்கலைக்கழக ஆளணிக்கான மேற்கூறப்பட்ட ரூபா 5000/- மற்றும் ரூபா 2000/- கொடுப்பனவுகள் முறையே 2015 பெப்ரவரி மற்றும் 2015 ஜுன் மாதம் முதல் செலுத்துவதற்கு உயர்கல்வி நிறுவகங்கள் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**ஒப்பம்: பேராசிரியர் பிரியந்த பிரேமகுமார**

செயலாளர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி இராங்க அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உபதலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர்,பல்கலைக்கழ கமானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.